


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 121 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 25 – செவ்வாய்க்கிழமை 10 டிசம்பர் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 121: Thiruvalluvar Year - 2055 - Karthigai 25 - Tuesday 10 December 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## கேரள மாநிலம் – வைக்கத்தில் டிச. 12 அன்று – கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் விழா!

# தந்தை பெரியார் நினைவகம் : முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## வைக்கம் போராட்ட வெற்றியின் நூற்றாண்டு நிறைவு விழாவிலும் பங்கேற்கிறார்!

**வைக்கம் (கேரளா), டிச.10–**

**இந்திய சமூக நீதி வரலாற்றில் முதல் வெற்றிக் களமான வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா, கேரளத்தின் வைக்கம் நகரில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், டிச.12– வியாழக்கிழமை அன்று மாபெரும் விழாவாக நடைபெறுகிறது.**

**இம்மகத்தான விழாவில் – புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துப் பேருரையாற்றுகிறார்.**

**வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விழா பற்றிய விவரம் வருமாறு:**









"தீண்டாமை இந்த நாட்டின் சாபக்கேடு" என்றார் அண்ணல் காந்தியடிகள். தீண்டாமைக் கொடுமையை ஒழித்திட கேரள மண்ணில் வைக்கம் நகரில் நடைபெற்று வெற்றி கண்ட இந்தியாவின் முதல் போராட்டம் வைக்கம் போராட்டம்!

"தொட்டால் தீட்டு" என்பார்கள். தொடாமலேயே, சிலரைக் கண்ணால் கண்டாலேயே தீட்டு என்ற வழக்கமும் ஒரு காலத்தில்



இருந்துள்ளது. அதையெல்லாம் விட, கேரள மாநிலம் வைக்கம் நகரில் மகாதேவர் கோவில் இருக்கும் தெருவில் நடந்தாலேயே தீட்டாகிவிடும்; ஆதலால், கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களிலும், கோவிலுக்கு எதிரே உள்ள தெருவிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள் முதலான சமுதாயத்தினர் நடந்து செல்லவே கூடாது என்னும் கொடிய தடை இருந்தது. அந்தத் தடையை உடைத்திட 1924ஆம் ஆண்டில் நடைபெற்ற போராட்டம்தான் வைக்கம் போராட்டம்!

வைக்கம், கேரள மாநிலத்தின் அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தில் அடங்கியிருந்த நகரமாகும். அந்நகரிலுள்ள மகாதேவர் கோவிலைச் சுற்றி அரசு அலுவலகங்கள், நீதிமன்றம் எல்லாம் இருந்தன.

ஈழவர் சமுதாயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் மாதவன் என்பவர் தீண்டத்தகாதவர் என்பதால், அந்த நீதிமன்றத்திற்குள் செல்ல முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. இதனை எதிர்த்துத்தான் வழக்கறிஞர் மாதவன், கேசவ மேனன், டி.கே.மாதவன், பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் முதலான பலர் போராடினார்கள். அப்படிப் போராட்டம் நடத்திய அனைவரையும் திருவாங்கூர் சமஸ்தான போலீசார் கைது செய்தனர். அதனால், போராட்டம் நின்றுவிடும் சூழ்நிலை உருவானது. அப்போது இறுதியாக கைதாகிச் சிறை சென்ற பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், கேசவ மேனன் ஆகியோர் கையெழுத்திட்டு; அப்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களுக்குக் கடிதம் எழுதி, தாங்கள்தான் வைக்கம் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தி வெற்றி தேடித் தேர வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். அந்தக் கடிதம் கிடைத்ததும், 13.04.1924 அன்று வைக்கம் நகருக்கு வந்த தந்தை பெரியார் அவர்களால் போராட்டம் தீவிரம் அடைந்தது.

திருவாங்கூர் மகாராஜா ஏற்கனவே பல முறை ஈரோடு நகருக்கு வந்து தந்தை பெரியார் இல்லத்தில் விருந்தினராகத் தங்கியிருந்தவர். ஆதலால், தந்தை பெரியார் அவர்களைத் தம் விருந்தினராக நடத்த விரும்பினார். அதைக் காவல் துறையினரும் மகாராஜாவின் அலுவலர்களும் பெரியாரிடம் தெரிவித்தனர். தந்தை பெரியார் அவர்கள், நான் அரச விருந்தாளியாக இங்கு வரவில்லை என நயமாகக் கூறி மறுத்துவிட்டார்.

அதன் பின்னர், தந்தை பெரியார் அவர்களின் போராட்டத்தில் மக்கள் திரண்டதைக் கண்டு பொறுக்க முடியாத நிலையில், திருவாங்கூர் போலீசார் தந்தை பெரியார் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். முதல் முறை 1 மாதமும், இரண்டாவது முறை 6 மாதமும் கடுங்காவல் தண்டனை வழங்கி, தந்தை பெரியார் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

தந்தை பெரியார் கைதாகிச் சிறையில் இருந்தபோது, தந்தை பெரியார் அவர்களின் துணைவியார் அன்னை நாகம்மையார் அவர்களும், தங்கை கண்ணம்மாள் அவர்களும் வைக்கம் வந்து, போராட்டக்களத்தில் இறங்கினர்.


வைக்கம் நகரைச் சுற்றியிருந்த கிராம மக்களும் திரண்டு தொடர்ந்து போராடியதால் திருவாங்கூர் சமஸ்தான அரசு பணிந்து, மகாதேவர் கோவில் தெருக்களில் ஈழவர் முதலான வகுப்பார் நடந்து செல்வதற்கு இருந்த தடையை நீக்கி, எல்லோரும் செல்லலாம் என்று ஆணைபிறப்பித்தது.

இப்படி, வைக்கம் பேராட்டத்தை வெற்றிபெறச் செய்ததால் தந்தை பெரியார் அவர்களைத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் "வைக்கம் வீரர்" எனப் பாராட்டி எழுதினார்.

வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவாக, அந்நகரில் தந்தை பெரியார் நினைவகமும், பெரியார் நூலகமும் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்கள், வைக்கம் போராட்டத்தில் பங்கேற்ற நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக திராவிட நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வைக்கம் நகரில் உள்ள தந்தை பெரியார் நினைவகத்தையும், நூலகத்தையும் புதுப்பித்திட 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி ஆணையிட்டார்கள்.

அதன்படி, தமிழ்நாடு அரசின் பொதுப் பணித்துறையால் புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.12.2024 அன்று காலை 10 மணியளவில் திறந்து வைக்கிறார்கள்.



இந்த மாபெரும் விழாவிற்கு, கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையேற்கிறார். திராவிடர் கழகத் தலைவரும், தந்தை பெரியார் அவர்களின் வாழ்நாள் மாணவருமான தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் கேரள அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் பங்கேற்கிறார்கள்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வரவேற்புரை நிகழ்த்திட, கேரள மாநில அரசின் தலைமைச் செயலாளர் திருமதி சாரதா முரளிதரன் நன்றியுரை வழங்குகிறார்.

இந்திய சமூகநீதி வரலாற்றில் தலைமையிடம் பெற்றுள்ள இந்த வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் பங்கேற்ற நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கேற்க தமிழ்நாடு முதலமைச்சர், சமூக நீதியின் சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள மாநிலம் வைக்கம் நகருக்குப் பயணம் மேற்கொள்ள விருக்கிறார்.

சமூகநீதி வரலாற்றின் முதல் வெற்றி விழா நகரமான வைக்கம் நகரில் தமிழ்நாடு அரசு, கேரள மாநில அரசோடு இணைந்து இந்த மகத்தான விழாவைக் கொண்டாடுவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பு நிகழ்வாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# 'டங்ஸ்டன்' சுரங்க உரிமத்தை ரத்து செய்யக் கோரும் தனித் தீர்மானம்!

## சட்டப்பேரவையில் நிறைவேற்றம்!

சென்னை, டிச. 10 –

தமிழ்நாடு சட்டசபை கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. இதில் மதுரை மாவட்டத்தில் வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமையை, உடனடியாக ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, தனித்தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாடு சட்டசபை கூட்டத் தொடர் 2 நாட்கள் நடை பெறும் என சபாநாயகர் அப்பாவு அவர்கள் அறிவித்திருந்தார். அதன்படி தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. காலை 9.30 மணிக்கு அவை கூடியதும் மறைந்த



உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, முரசொலி நாளிதழின் நிர்வாக ஆசிரியர் முரசொலி செல்வம் உள்ளிட்டோர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

பின்னர் கேள்வி நேரம் தொடங்கும் நிலையில், உறுப்பினர்களின் கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளித்தனர். இதனைத் தொடர்ந்து 2024-25ம் ஆண்டில் கூடுதல் செலவிற்காக துணை நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனடியாக ரத்து செய்யக் கோரியும்,, மாநில அரசின் அனுமதியின்றி சுரங்க உரிமை ஏலங்களை மேற்கொள்ளக்கூடாது என ஒன்றிய அரசை வலியுறுத்தியும் தனித்தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தொடரின் இரண்டாம் நாளான இன்று (செவ்வாய்க் கிழமை), கேள்வி நேரம் முடிந்ததும், துணை நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதம் நடைபெறும். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளிப்பார். இதனைத் தொடர்ந்து கூடுதல் நிதி ஒதுக்குவதற்கான சட்ட மசோதா பேரவையில் நிறைவேற்றப்படும்.

---

# டெல்லியை நோக்கி விவசாயிகள் பேரணி!

## ஒன்றிய அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்காததால் மீண்டும் போராட்டம்!

*புதுடெல்லி, டிச. 10 –*

*டெல்லியை நோக்கிய பேரணியை மீண்டும் தொடங்கிய விவசாயிகள் மீது அரியானா போலீசார் கண்ணீர்புகை குண்டுகளை வீசி விரட்டி அடித்ததால் பதற்றம் அதிகரித்துள்ளது.*

*வேளாண் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப் அரியானா எல்லையில் உள்ள சம்பு பகுதியில் இருந்து விவசாயிகள் டெல்லி நோக்கி பேரணியை தொடங்கினர். தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த அவர்களை தடுத்து நிறுத்திய போலீஸார், அவர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கலைத்தனர். இதனால், போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் காயமடைந்தனர். டெல்லி செல்லாமல் தடுக்க அரியானா அரசு அமைத்த முள்வேலி தடுப்பு, ஆணி தடுப்புகளை தகர்த்தெறிந்து விவசாயிகள் டெல்லி நோக்கி முன்னேற முயன்றனர்.*

*இந்நிலையில், டெல்லிக்கு செல்லும் போராட்டத்தை ஒரு நாள் ஒத்தி வைத்திருப்பதாகவும், ஒன்றிய அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்காவிட்டால், மீண்டும் போராட்டத்தை தொடர உள்ளதாகவும் விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் தெரிவித்திருந்தனர்.*

*ஆனால், இது குறித்து எந்த அறிவிப்பையும் ஒன்றிய அரசு வெளியிடவில்லை. இந்நிலையில், டெல்லியை நோக்கிய பேரணியை விவசாயிகள் தொடங்கினர். அப்போது தடைகளை தகர்த்து முன்னேறியவர்களை போலீசார் தடுத்து நிறுத்த முயன்றனர். அப்போது, போலீசாரின் தடைகளை கடந்து விவசாயிகள் முன்னேற முயன்றனர். இதனைத் தொடர்ந்து போலீசார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் விவசாயிகளை விரட்டி அடித்தனர்.*